**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.01/2018** P.W. 23

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சரவணன் | Caste: | |
| Father's Name | . மகாலிங்கம் | Calling: | சிபிசிஐடி ஆய்வாளர் |
| Village | :. தஞ்சாவூர் | Religion: | இந்து |
| Taluk | : தஞ்சாவூர் | Age | . 45 |
| Date | : 15.02.2023 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 15.02.2023

(A1 and A2 are present.

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**.

நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்றே சம்பவம் நடந்த இடத்திற்கு போனேன். அந்த இடத்தில் சுமார் 2.30 மணி நேரம் இருந்தேன். அப்போது ஏற்கனவே பார்வை மகசர் சாட்சிகளாக இருந்து நபர்கள் சொன்ன விபரங்களின் அடிப்படையில் சம்பவ இடத்தை பார்த்து ஏற்கனவே கா.ஆ பழனிச்சாமி தயார் செய்து வைத்திருந்த பார்வை மகசர் சரிதான் என்பதை உறுதி செய்து கொண்டேன் அதனால் நான் பார்வை மகசர் தனியாக தயார் செய்யவில்லை. ( சாட்சி மீண்டும் 15 மணியில் இருந்து சுமார் 1 மணிநேரம் சம்பவ இடத்தில் இருந்ததாக கூறுகிறார். ) முதலில் சம்பவ இடத்தில் 2.30 இருந்ததாக கூறிவிட்டு தற்சமயம் வழக்கின் முன்னேற்றத்திற்காக 1 மணி நேரம் இருந்ததாக சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கே நான் போகவில்லை என்பதால்தான் மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜா, தேவேந்திரன் ஆகியோர்களை மீண்டும் என்ன காரணத்திற்காக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் நான் என்னுடைய மேல் விசாரணைக்காக வழக்கை எடுத்துக்கொண்டதால் பார்வை மகசர் மாதிரி வரைபடத்தை உறு

செய்துகொள்வதற்காக மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறுதி அறிக்கையில் மேற் சொன்ன விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன விபரங்கள் தவறானவை என்பதால்தான் சாட்சிகளை மீண்டும் விசாரித்ததற்கான காரணத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. ராஜா, தேவேந்திரன் ஆகிய சாட்சிகளுக்கு 2 குவிமுச 161 பிரிவின் கீழான வாக்குமூலம் இருக்கிறது என்றால் சரிதான். ஒரு வாக்குமூலம் ஆய்வாளர் பழனிச்சாமி அவரது விசாரணையின்போது பதிவு செய்ததாகும். இன்னொரு வாக்குமூலம் என்னுடைய விசாரணையின்போது நான் பதிவு செய்த வாக்குமூலம் ஆகும். அந்த இரண்டு வாக்குமூலங்களிலும் எந்த முரண்பாடும் இல்லை என்றால் சரிதான். இரண்டுக்கும் இடையே முரண்பாடுகள் இருக்கிறது என்றும் நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாக்குமூலங்களை நான் கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான். தட்டச்சுதான் செய்தேன். என்ன காரணத்திற்காக நான் கைப்பட எழுதாமல் நான் தட்டச்சு செய்தேன் என்ற விபரத்தை குற்றப்பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சொல்லவேண்டிய அவசியம் இல்லை அதனால் சொல்லவில்லை. 161 குவிமுச பிரிவின் கீழான வாக்குமூலங்களை எங்கு வைத்து யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சாட்சிகளை விசாரணை செய்த அந்த இடத்திலேயே என்னால் தட்டச்சு செய்யப்பட்டது. என்னால் தட்டச்சு செய்யப்பட்ட விபரத்தை குற்றப்பத்திரிக்கையில் சொல்ல வில்லை என்றால் சொல்லவேண்டிய அவசியம் இல்லை அதனால் சொல்லவில்லை. அனைத்து சாட்சிகளின் வாக்குமூலங்களும் காவல் நிலையத்தில் வைத்து எதிரிகளுக்கு எதிராக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சி அல்போன்சாராணி மற்றும் சாட்சி ஷீலா, சாட்சி திருமாறன் ஆகியோரை என்ன காரணத்திற்காக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்ற விபரத்தை குற்றப்பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சொல்லவேண்டிய அவசியம் இல்லை அதனால் சொல்லவில்லை. புலன் விசாரணை அதிகாரி அவர் விசாரித்த சாட்சிகளை என்ன காரணத்திற்காக விசாரிக்கிறார் என்ற விபரத்தை சொல்லவேண்டும் என்றும் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்றும் பொத்தாம் பொதுவாக சொல்ல முடியாது என்று சொன்னால் சரியல்ல.

நான் சட்டத்திற்கு உட்பட்டு விதிமுறைகளை பின்பற்றி விசாரணை மேற்கொள்ளவில்லை என்பதால்தான் சொல்ல முடியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தெரியாமல் என் குழந்தையை எதிரிகள் கடத்திக்கொண்டு போய்விட்டார்கள் என்று எந்த இடத்திலும் தொலைந்துபோனதாக கூறப்படும் குழந்தையின் தாயர் சொல்லவில்லை என்றால் நேரடியாக சொல்லவில்லை காணாமல் போய்விட்டதாகதான் சொல்லியிருக்கிறார். அதனால் எதிரிகள் மீது பிள்ளைப் பிடித்துக்கொண்டுபோய்விட்டதாக இதச 363 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தது தவறு என்றால் சரியல்ல. புகார்தாரர் ஜெயந்தி மற்றும் சர்பர்அலி ஆகியோரை எந்த இடத்தில் வைத்து விசாரித்து எத்தனை மணிக்கு வாக்குமூலம் பதிவு செய்தேன் என்று குற்றப்பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் திருமதி சந்திரா, சபாபதி மற்றும் ரபேல் அவர்களை என்ன காரணத்திற்காக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்று குற்றப்பதிரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சொல்லவேண்டிய அவசியம் இல்லை அதனால் சொல்லவில்லை. அவர்களிடம் நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்பதால் தான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 13.11.2016 ல் ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்கள் நடத்தும் சாட்சிகள் அருள்மேரி, ஜெயராஜ், மேரிகிருஸ்துராஜா ஆகியோர் ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்கள் நடத்துவதற்கான ஆதாரம் எதையும் விசாரித்து பார்த்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் நான் அந்த இல்லம் நடந்த இடத்திலேயே போய் பார்த்தால் அதுப்பற்றி கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. அந்த ஆவணங்களை நான் வழக்கிற்காக சேகரிக்கவும் இல்லை. அவர்கள் ஆதரவற்ற இல்லமே நடத்தவில்லை என்றால் சரியல்ல. அதனால் அந்த ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 13.12.2016 ல் சாட்சிகள் பாஸ்கர், சுரேஷ், கா.ஆ. சுரேஷ்குமார் மற்றும் 15.12.2016 உ.ஆ. ராஜேஷ், சி.சா.ஆ. சந்திரகாசன், முருகானந்தம் ஆகியோரையும் 18.12.2016 ல் சாட்சிகள் அமராவதி, ராக்கு (எ) ராக்காயி, செல்வி ஆகியோரையும் எந்த இடத்தில் யார் முன்னிலையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்று குற்றப்பதிரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சொல்லவேண்டிய

அவசியம் இல்லை அதனால் சொல்லவில்லை. 22.12.2016 தினகரன், தினமலர், 30.12.2016 நியூ இந்தியா எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழிகளின் நகல்களை நீதிமன்றத்தில் தகாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விசாரணையில் வழக்கு கோப்பில் இணைத்திருக்கிறேன். அதுப்போல் எந்த செய்தியும் வரவில்லை என்பதால்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேலும் மேற்சொன்ன விளம்பர நோட்சுகளை கடந்த 10.01.2017, 11.01.2017, 03.2.2017, 4.2.2017, 5.2.2017 15.02.2017, 17.02.2017, 19.02.2017, 24.02.2017, மற்றும் 11.03.2017 ஆகிய தேதிகளில் திருச்சி, வேளாங்கன்னி, திண்டுக்கல், பழனி, பழனி அடிவாரம், திருவாரூர், நாகூர், நீடாமங்களம், நாகப்பட்டினம், காரைக்கால், திருத்துறைப்பூண்டி, கரூர், ஈரோடு மற்றும் அதன் சுற்றப்புற பகுதிகளை காண்பித்து தகவல் அளிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டேன். 21.12.2016, 22.12.2016 மற்றும் 23.12.2016 ஆகிய தேதிகளில் கடத்தப்பட்ட குழந்தை பற்றி தகவல் தெரிவிக்க திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட அரசு கேபிள் டீ.வி மூலம் நடவடிக்கை மேற்கொண்டேன். மேலும் 01.01.2017 ம் தேதி அன்று சாட்சி திரு. சந்திரன் அவர்களை விசாரித்து அவரது வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்சொன்ன விபரத்தை யாரிடம் காண்பித்து விசாரணை மேற்கொண்டேன் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த விபரங்கள் வழக்கு கோப்பில் இணைக்கப்பட்டிருக்கிறது. அதுப்பற்றி நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அரசு கேபிள் நிறுவன ஊழியர்கள் எவரையும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்கள் தவறு என்பதால்தான் கேபிள் டிவி நிறுவனத்தில் உள்ள யாரையும் நான் சாட்சியாக விசாரிக்கிவல்லை என்றால் சரிதான். 06.01.2017 ம் தேதி செய்தித்தாளில் வந்த செய்தியின்பேரில் சிபிசிஐடி அலுவலகம் வந்த சாட்சிகள் திரு. முத்துக்குமார், திரு. கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர்கள் எந்த செய்தித்தாளை பார்த்துவிட்டு எங்கள் அலுவலக விசாரணைக்கு வந்தார்கள் என்று பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை தமிழ் செய்தித்தாளை பார்த்துவிட்டு வந்தாக வாக்குமூலத்தில் சொல்லியிருகிறார்கள். அப்படி அவர்கள் எந்த விபரமும்

சொல்லவில்லை என்றும் அவர்கள் காவல் நிலையத்தில் கையிருப்பு சாட்சிகள் என்றும் சொன்னால் சரியல்ல. 13.01.2017, 23.01.2017, 17.03.2017, 17.02.2017 ல் விசாரிக்கப்பட்ட சாட்சிகளையும் எந்த இடத்தில் வைத்து எத்தனை மணிக்கு வாக்குமூலம் பதிவு செய்தேன் என்ற விபரத்தை குற்றப்பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சொல்லவேண்டிய அவசியம் இல்லை அதனால் சொல்லவில்லை. எதிரியை கைது செய்த சமயத்தில் சாட்சிகள் முன்னிலையில் எந்த துன்புறுத்தலுமின்றி எதிரி தாமாக வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும் பழனியில் அவரது வீட்டில் இருந்த எதிரிகளை விசாரணைக்கு என்று அழைத்துவந்து கைது செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் புத்தூர் ரவுண்டானா கடைகள் உள்ள பகுதி என்றால் சரிதான். கடைகளில் இருந்தவர்கள் முன்னிலையில் கைது செய்யவில்லை என்றால் சரிதான். கடையில் இருந்தவர்களுக்கு நாங்கள் கைது செய்கிறோம் என்ற விபரம் தெரியாது. கடையில் இருந்தவர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலமும் வாங்கவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே அந்த இடத்தில் வைத்து கைது செய்திருந்தால் கடையில் இருந்தவர்களுக்கு தெரிந்திருக்கும் அவர்களையும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்திருப்பேன் என்றால் சரியல்ல. என்னுடைய தகவலின் பேரில்தான் Child line உறுப்பினர்கள் அந்த இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். அவர்களும் காவல் துறையின் கையிருப்பு சாட்சிகள் என்றால் சரியல்ல. 2 வது எதிரியையும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை அவர்களிடமிருந்து குழந்தையையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. கைது குறிப்பாணையில் எதிரிகளின் கைது குறிப்பாணை பற்றி அவர்களது உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றால் சரியாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டப்படி எதிரிகளை அடையாளம் காட்டுவதற்கு எந்த விதத்தில் அடையாள அணிவகுப்பு நடத்தவேண்டும் என்று எனக்கு தெரியும். பொதுவாக அடையாள அணிவகுப்பு நீதித்துறை நடுவர் முன்பு காவல்துறையினர் இல்லாத நிலையில்

சிறைச்சாலைக்குள் நடக்க வேண்டும் என்று PSO பிரிவு 600 ல் சொல்லப்படுள்ளது என்றால் இந்த வழக்கில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் அவ்வாறு செய்யப்படவில்லை என்றால் சரிதான். கடத்தப்பட்டது குழந்தை என்பதால் அந்த நடைமுறையை பின்பற்றவில்லை. அது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. வேண்டுமென்றே நடைமுறையை பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் ஜெயந்தி மற்றும் சுகன்யா ஆகியோர் 164 குவிமுச படி கொடுத்த வாக்குமூலம் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 03.04.2017 ம் தேதி மீண்டும் ஜெயந்தி மற்றும் சுகன்யாவை எதற்காக விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரரோ சுகன்யாவோ குழந்தையை கடத்தியதால் மன உளைச்சல் ஏற்பட்டதாகவோ கொடுமை ஏற்பட்டதாகவோ புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறார்கள். மேற் சொன்னபடி மன உளைச்சலோ கொடுமையோ ஏற்பட்டிருந்தால் புகாரிலேயே சொல்லியிருப்பார்கள் என்றும் அவ்வாறு எதுவும் ஏற்படாததால்தான் புகாரில் சொல்லப்படவில்லை என்றும் வழக்கிற்கு பின்னிட்டு அந்த விபரங்களை நானே வாக்குமூலத்தில் சேர்த்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. ஜெ.ஜெ ஆக்ட் 75 ல் கூறியுள்ள எந்தவிதமான பாதிப்பும் புகாரில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறார்கள். இந்த வழக்கில் குழந்தை கடத்தப்படவே இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சட்டத்தின் நடைமுறைகளை பின்பற்றி சரியாக விசாரணை மேற்கொண்டிருந்தால் சாட்சி சுகன்யா குழந்தையை வளர்க்க முடியாமல் 2 வது எதிரியிடம் சுவீகாரம் கொடுத்த விபரம் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. அவசர கதியில் வழக்கில் விசாரித்து வழக்கிற்கு ஏற்றார்போல் ஆவணங்கள், தடய பொருள்கள், வாக்குமூலங்கள் எல்லாம் தயார் செய்து எதிரிகள் மீது தவறாக வழக்கு பதிவு செய்து அதற்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**